**R4766**

# THE LOVE TO BE DESIRED

## விரும்பப்படத்தக்க அன்பு

"நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாயிருக்கும்படி, ஆவியினால் சத்தியத்துக்கு கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களை சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடும் ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்."– 1பேதுரு 1:22

இந்த வசனத்தில் "ஆத்துமா" என்ற வார்த்தை, வெறும் சரீரத்தை மாத்திரமல்ல, சரீரத்தையும் உள்ளடக்கிய மாம்சீக ஜீவியை குறிக்கிறது. ஆகையால் சுத்தமாக்குதல் என்பது இருதயத்தை (மனம், சித்தம், செயல்படுத்தும் நோக்கம் அல்லது நோக்கங்கள்) முற்றிலுமாக சுத்தப்படுத்துவதைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட சுத்தமாக்குதலின் பலன் வெளியரங்கமான வாழ்க்கையிலும் நடத்தையிலும் வெளிப்படுத்தப்படும்.

நாம் நமது ஆத்துமாவை சுத்தப்படுத்துகிறோம். அதாவது சத்தியத்திற்கு கீழ்ப்படிவதினால் ஆவியின் மூலமாக நமது ஆத்துமாக்கள் சுத்தமாக்கப்படுகிறது. (நாம் பரிசுத்தவான்களாக இருந்தால் சுத்தமாக்கப்படுகிறது) அதாவது நாம் சத்தியத்தை அறிய வேண்டும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. எல்லா சத்தியத்தையும் அறிந்திருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் இந்த பாடத்திற்காக மாபெரும் சத்தியத்தை நாம் அறிந்திருக்க வேண்டும் என்பது அவசியமாக இருக்கிறது. தேவன் பாவத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்த்தார் என்பது சத்தியம். சத்தியத்தை அறிந்துகொள்ளவே மனுக்குலத்தின் முழு உலகமும் இந்த ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக வந்தது. உலகத்தின் மேலிருக்கும் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து தப்பிக்கும்படியான ஒரு வழியை தேவன் கொடுத்திருக்கிறார் என்பதை அறிவதே சத்தியம். மேலும் ஒரு குறிப்பிட்ட வழி மட்டுமே இருக்கிறது என்பதை அறிவதே சத்தியம். இந்த தெய்வீக கிருபையை யாரும் பயன்படுத்திக்கொள்ளலாம். அதாவது கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கப்பட்டு, சிலுவையை எடுத்துக்கொண்டு அவரது அடிச்சுவட்டை பின்பற்றுவதாகும். நாம் நம்மை ஆவியிலும் சத்தியத்திலும் விசுவாசத்தின் மூலம் சமர்ப்பிக்கும் போது நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன. நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக ஏற்றுக்கொள்ளப்பட்டோம். நமது ஆத்துமா பரிசுத்தமாக்கப்பட்டது. நாம் ஒரு புது வாழ்க்கையை ஆரம்பித்தோம்.

நமது வசனத்தில் அப்போஸ்தலர் கூறுவதாவது: சத்திய ஆவிக்கு கீழ்ப்படிதல் மற்றும் அறிவின் மூலம் குணலட்சண மகிமையின் மறுரூபமடைந்து, மாயமற்ற அன்பினால் நாம் சகோதரரை சிநேகிக்க கற்றுக்கொண்டோம். இது உண்மையான அன்பாக, பாசங்கு இல்லாததாக, வெறும் வெளியரங்கமாயிராமல், முகத்தில் புன்னகை பெறுதல் அல்லது கைகளில் இதய பிடிப்பை தருவதாக இருக்கிறது. அந்த ஆவியின் மூலம் விலையேறப்பெற்ற இரத்தத்தில் நம்பிக்கை வைத்து, அன்பான இரட்சகரிடம் அர்ப்பணம் செய்து, "அவரது வழிநடத்துதலை பின்பற்ற நாடுகிற சகோதரர்களிடம்" இனம் அல்லது நிறம் அல்லது கல்வி அல்லது வறுமை அல்லது இல்லறம் ஆகியவற்றை பார்க்கக்கூடாது. நாம் அனைத்து சகோதரர்களையும் உண்மையாக, மாயமற்ற அன்பினால் நேசிக்கிறோம் என்று உண்மையுடன் சொல்லுகிற அளவுக்கு நமது இருதயம் ஆண்டவரின் ஆவியினால் முழுவதுமாக நிரம்பியிருக்கிற நிலையை நாம் அடைந்திருக்கிறோம்.

இப்பொழுது இப்படியாக நல்ல வழியை பெற்று, அப்போஸ்தலர் இன்னும் முன்னேற்றமான ஒருபடியை காண்பிக்கிறார். அடுத்து நமது இருதயத்தை பரிசுத்தமாக வைத்துக்கொள்ள பார்க்க வேண்டும் என்று கூறுகிறார். "சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்." நாம் அவர்களை சகோதரர்களாக கருதுவது மாத்திரமல்ல, "மாயமற்ற அன்பை" செலுத்த வேண்டும். கர்த்தரிடத்தில் நமது உறவு மற்றும் கர்த்தரிடத்தில் அவர்களது உறவின் அடிப்படை கொள்கையை அங்கீகரிக்க வேண்டும். அவர்களும் நம்மைப் போல கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருக்கிறார்கள். இது நமக்கு மாபெரும் தயவையும், அவர்களை உற்சாகப்படுத்தவும் உதவவும் எதையும் செய்ய விருப்பத்தையும் கொடுக்க வேண்டும்.

### பாரபட்சமற்ற அன்பு – தீவிரமானது மற்றும் பலமானது

இந்த அன்பு, சகோதர அன்பு மற்ற அன்பைக் காட்டிலும் வித்தியாசமானது. அது பாரபட்சமற்ற அன்பு; மிகவும் இரக்கமுள்ளது, தீவிரமானது; சகோதரர்களுக்காக ஜீவனையும் நாம் கொடுக்க விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த அன்பு நமது பரலோக பிதாவானவரால் காட்டப்பட்ட அன்பாக இருக்கிறது. நாம் பாவிகளாயிருக்கும் போதே அவர் நம்மீது அன்பு செலுத்தினார். ஆகையால் இயேசுவின் அன்பு சுயநலமற்றது, பரிசுத்தமானது, இரக்கமுள்ளது. நமக்காக நம்நிமித்தம் நன்மை செய்கிற, நம்மிடமிருந்து எதையும் எதிர்பார்க்காத அன்பாக இருக்கிறது.

அப்போஸ்தலர் மேலும் கூறுகிறதாவது: நாம் இந்த அன்பை மட்டும் பெற்றிருந்தால் போதாது. அதை நாம் ஆர்வத்துடனும் அரவணைப்பு மற்றும் தீவிரத்துடனும் செலுத்த வேண்டும். அறை குறையான அலட்சியத்துடனோ அல்ல, பணக்காரன், ஏழை என்றோ படித்தவர்கள், அறியாமையுள்ளவர்கள் என்றோ வித்தியாசம் பாராமல் உண்மையான ஆர்வத்துடன் ஒருவருக்கொருவரின் நலத்தில் அக்கறை காட்ட வேண்டும். அவர்களில் காணப்படும் குறைகளை நிறைவு செய்ய தேவையான எந்த உதவியையும் நாம் செய்ய வேண்டும். விருப்பத்துடனும் ஞானத்துடனும் அவர்களுக்கு நன்மை செய்யும் நோக்கத்துடனும் இருக்க வேண்டும்.

இது நமது சொந்த அனுபவமாக இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் பரிந்துரைக்கிறார். இது நாம் அங்கீகரிக்கிற வெறும் கொள்கையாக மட்டுமிராமல், இது நமது சொந்த வாழ்க்கையிலும் நிறைவேற்றப்படுகிறதை நாம் கவனிக்க வேண்டும். நமக்கு எதிராக மீறுதல் பண்ணுகிறவர்களை மன்னிக்கிற பழக்கம், நன்மை செய்கிற மனதை பெற்றிருப்பது இயற்கையானதாக இருக்காது. ஆனால் முழு இனமும் பரம்பரை மூலம் விழுந்து போய் சீரழிந்தது என்ற உண்மையை நாம் நினைக்கும் போது, அது நம்மை அவர்களிடம் அதிக அனுதாபம் உடைவர்களாக ஆக்கும். சிலர் அதிகமாக சீரழிவுக்கு சென்றிருந்தால் நாம் அவர்களுக்காக அதிக அனுதாபம் உடையவர்களாக இருக்க வேண்டும். நாம் இந்த திசையில் அனுதாபத்துடன் சிந்திப்பதால், நமது அனுதாப அன்பு

அதிகரிக்கும். நாம் அனுதாப அன்பை அப்பியாசப்படுத்துவதால் புது சிருஷ்டி அபிவிருத்தி அடைகிறது.

நமது கர்த்தராகிய இயேசு கூறுகிறதாவது: "நான் உங்களில் அன்பாயிருந்தது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்." உங்களுக்கு முன்பாக தரநிலையை அமையுங்கள். சகோதரர்களுக்கான நமது அன்பு முதலாவது இந்த கட்டளைக்கு கீழ்ப்படிவதாக இருக்க வேண்டும். நாம் தெய்வீக கட்டளைக்கு கீழ்ப்படிந்து, நாம் பின்பற்றுவதால், நமது அன்பு அபிவிருத்தி அடைகிறது, நமது அனுதாபம் விரிவடைகிறது. இதைப் புறக்கணிக்காதபடி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த அறிவுரையை நாம் கவனிக்கவில்லை என்றால், பிதாவானவர் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிற -வர்களாக இருக்க முடியாது. ஏனெனில் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்க வேண்டுமானால் அவர்கள் அவருடைய நகலாக இருக்க வேண்டும் என்று முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தாகவும் அப்போஸ்தலர் கூறுகிறார். மெய்யான மற்றும் ஆர்வமுள்ள அன்புடையவர் -களாயிருப்பதில் நகலாக இருக்க வேண்டும்.

## கர்த்தரில் அறிவுக்கேற்றபடி அவரில் வலிமை

ஒருவன் அறிவில் வளரவில்லை என்றால், யாரும் கர்த்தரில் வலிமையாக வளரமுடியாது. கர்த்தருடைய வார்த்தையை ஆராய்வதில் உள்ள வைராக்கியத்தின் மூலம் கர்த்தர் மேலும் அவரது சத்தியத்தின் மேலும் உள்ள அன்பை ரூபகாரப்படுத்துகிறவர்களை நாம் மிகவும் அதிகமாக மதிக்கிறோம். அவர்கள் தேவனுடைய ஆழமான காரியங்களில் இன்னும் அதிகமாக வழிநடத்தப்படுவதன் மூலம் தேவனுடனான அவர்கள் தயவு வெளிப்படுகிறது.

எனினும் விசுவாச வீட்டில் பலவீனமானவர்கள் கர்த்தரின் வலிமையில் வளர கவனிக்கப்பட்டு அன்பும் உதவியும் கொடுக்கப்பட வேண்டும். இங்கே அப்போஸ்தலர் இன்னொரு ஆலோசனையை வழங்கி கூறுகிறதாவது: "பலமுள்ளவர்களாக நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களை தாங்க வேண்டும்." (ரோமர் 15:1) அவரது பலவீனத்திலிருந்து விடுபட அவரோடு விவாதித்து அவருக்கு உதவி செய்ய முயற்சிக்க வேண்டும். இதை நாம் சாந்தம் மற்றும் அன்பின் ஆவியில் செய்ய வேண்டும். நமது பொறுமைக்கான சோதனையை சாந்தத்துடன் சகிக்கும் போது, நம்மையே சந்தோஷப்படுத்த நாடாமல்,பலவீனமுள்ள சகோதரன் அல்லது சகோதரிக்கு உதவ வேண்டும். அப்போஸ்தலர் கூறுவது போல, "நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கு ஏதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்கு பிரியமாய் நடக்கக்கடவன்." அவரது தவறை பெரிதுபடுத்தாமல் நாம் பரவாயில்லை என்று கருதினாலும், அதற்கு எதிராக போராட அவரை அன்பாக தூண்ட வேண்டும். நமக்கு அது அசௌகரியத்தை கொண்டு வந்தாலும் அதை தாழ்மையுடனும் பொறுமையுடனும் தெரிவிக்க வேண்டும்.

இந்த ஆவி, கர்த்தரின் சரீர அங்கங்களிடையே பரவியிருக்குமானால், அனைத்து அங்கங்களும் ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்பையும் அக்கறையும் பெற்றிருப்பார்கள். நன்மையான யாவற்றையும் ஊக்கபடுத்தவும் பலப்படுத்தவும் நாடுகிற அக்கறையாக இது இருக்கிறது. இது தகுதியற்ற அனைத்தையும் தடை செய்யும். குறையின் மேல் கவசத்தை போடும் அன்பாக இருக்கிறது. பலவீனமுள்ள சகோதரனை மற்றவர்கள் கண்டனம் பண்ண அம்பலப்படுத்துவதைக் காட்டிலும் தவறை மூட முயற்சிக்கும்.

இப்படிப்பட்ட சுய பலியின் அன்புக்கு அடக்கம், தயவு, பொறுமை மற்றும் விசுவாசத்தின் ஆவி எப்படி தேவைப்படுகிறது! நமது ஆண்டவரின் வார்த்தைகள் எவ்வளவு பலமுள்ளவர்களாக இருக்கின்றன. "நீங்கள் (உலக ஆவியிலிருந்து கிறிஸ்துவின் ஆவிக்கு) மனந்திரும்பி (சாந்தம் மற்றும் போதிக்கப்படுதலில்) பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்." (மத்தேயு 18:1-6)